# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

<u>ஆணை எண். 362/ந/2025, நாள் 19.12.2025</u>

R. மோகன்
பொள்ளாச்சி, – முறையீட்டு மனுதாரர்
கோயம்புத்தூர் மாவட்டம்.

ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி, – எதிர்மனுதாரர்
கோயம்புத்தூர் மாவட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, மாக்கினாம்பட்டி சாலை, ஜோதிநகர், விஜபி கார்டன், எண்.71 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மோகன் என்பவரது 14.10.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.10.2025 அன்று பெறப்பட்டு, 362/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, மாக்கினாம்பட்டி சாலை, ஜோதிநகர், விஜபி கார்டன், எண்.71 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. மோகன் என்பவரின் 14.10.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பொள்ளாச்சி நகராட்சி 36–வது வார்டுக்கு உட்பட்ட விஜபி கார்டனில் ஏற்கனவே உள்ள திறந்த வெளி சாக்கடை வடிகால் / மழைநீர் வடிகால் மேடு பள்ளமாகவும், அனைத்து சாலை சந்திப்புகளிலும் வடிகால் செல்லும் குழாய்கள் சேதமடைந்துள்ளன. இதனால் சாக்கடை கழிவு நீர் / மழை நீர் சரிவர செல்லாமல் இருப்பதால் பாதாள சாக்கடை பணியினை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. விஜபி கார்டன் நுகர்வோரிடம் கட்டிட அனுமதியில் பாதாள சாக்கடை பணிகள் தொடர்பாக பெறப்பட்ட வைப்புத் தொகையின் அடிப்படையில் புகார் கடிதம் 25.03.2024 அன்று நகராட்சி ஆணையாளர், நகராட்சி மண்டல இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது மற்றும் புகார் கடிதம் தொடர்பாக 12.06.2024 அன்று தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டது. ந.க.எண்.3357/2024/அ5, தேதியிடப்படாத பதில் கடிதம் 19.07.2024 அன்று நகராட்சி சரியான தகவலை வழங்கவில்லை. 19.07.2024 அன்றை தினமே RTI 19 (1) மேல் முறையீடு செய்யப்பட்டது. இதற்கும் ஏற்கனவே வழங்கிய பதிலே போதுமானது என தவறான பதிலை வழங்கினர்.

2) இதன் பிறகு 22.07.2024 அன்று நகராட்சி மண்டல இயக்குநர் அவர்களுக்கு நினைவூட்டல் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. இதற்கு எவ்வித பதிலும் வழங்கப்படவில்லை. சட்ட அறிவிப்பு கடிதம் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி மண்டல இயக்குநருக்கு 20.08.2024 அன்று அனுப்பப்பட்டது. அப்போதைய நகராட்சி ஆணையாளர் திரு. கணேசன் அவர்களை விஜபி கார்டனிலிருந்து குழுவாக 31.08.2024 அன்று நகராட்சி அலுவலகத்தில் சந்தித்தோம். ஆணையாளர் அவர்கள் பாதாள சாக்கடை வருகின்ற அடுத்த திட்டபணிகளுடன் செய்து வழங்குவதாகவும் அதுவரை இருக்கின்ற சாக்கடை வடிகாலை, மழை நீர் வடிகாலாக சரிசெய்து வழங்குவதாக உறுதியளித்தார்.

3) மழைநீர் வடிகால் பணிகள் தொடர்பாக 15.10.2024 அன்று குறைக்களைவு புகார் கடிதம் நகராட்சி ஆணையாளர் மற்றும் சார் ஆட்சியர் ஆகியோருக்கு வடிகால் புகைப்படங்களுடன் அனுப்பப்பட்டது. நகராட்சி பொறியாளர் பிரிவிலுள்ள இளநிலை பொறியாளர் கணேஷ் சங்கர் அவர்கள் விஜபி கார்டனில் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டார்.

4) இதன் பிறகு நகர்மன்ற கூட்டரங்கில் 36–வது வார்டு விஜபி கார்டன் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நகர்மன்ற அனுமதி எண்.1264, நாள் 25.10.2024 அன்று மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படவுள்ளது என பதில் கடித ஆவணமாக 20.11.2024 அன்று வழங்கியுள்ளனர்.

5) தொடர்ந்து 18.02.2025 அன்று நகராட்சி பொறியியல் பிரிவில் தொடர்பு கொண்டு விசாரித்தபோது உதவி / இளநிலை பொறியாளர் பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளதையும் மற்றும் அவரது அனுமதி பெற வேண்டும் என்றனர். பின்னர் மழைநீர் வடிகால் பணிகள் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் புகார் கடிதமாக 20.02.2025 அன்று நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

6) மழைநீர் வடிகால் பணிகள் தொடர்பாக மீண்டும் 03.05.2025 அன்று நகராட்சி உதவி/இளநிலை பொறியாளரிடம் விசாரித்தபோது செயற்பொறியாளர் பணியிடம் நிரப்பப்படாமல் இருப்பதையும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மூலமும் அனுமதி பெற வேண்டும் என்றார். ஆகையால் 06.05.2025 அன்று நகராட்சி மண்டல இயக்குநர் அவர்களுக்கு மழைநீர் வடிகால் பணிகள் தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டது.

7) விஜபி கார்டனில் 30–க்கும் மேற்பட்ட வீடுகளிலிருந்து வெளியேறும் மழை நீர் / சாக்கடை கழிவு நீர் செல்ல முறையான வடிகால் அமைக்கப்படாமல் உள்ளது. கடந்த ஒரு வருடமாக பணிகளை மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

8) தொடர்ந்து நகராட்சி சுகாதார பிரிவிலிருந்து சுகாதார தூய்மை பணியாளர்களால், விஜபி கார்டனில் சாக்கடை வடிகாலை தூய்மை செய்து வருகின்றனர். மேடுபள்ளமான இடத்திலும் அனைத்து சாலை சந்திப்புகளிலுள்ள சேதமடைந்த வடிகால் குழாய்களில் தேங்கி நிற்கும் சாக்கடை கழிவு நீர் / மழை நீரால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது.

9) விஜபி கார்டன் பகுதி மக்களுக்கு ஏற்படும் சுகாதார சீர்கேட்டிற்கு 36–வது வார்டு உள்ளாட்சி பிரதிநிதி, ஆணையாளர், நகராட்சி மண்டல இயக்குநர் ஆகியோர் பொறுப்பேற்க வேண்டும் மற்றும் தொடர்ந்து இப்பணியினை செய்ய காலதாமதமும் அலட்சியமும் செய்கின்றனர். ஆகையால் இவர்கள் மீது துறைரீதியான தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>Tamilnadu Public Health Act, 1939: Specifically, violations are occurring within:</u>

Chapter IV: Drainage: This chapter, regarding competent Local authority to maintain public drains, the resulting stagnation of waste water, directly violates the intended function of these public drains, and creates a public health hazard.

Chapter VI: Abatement of Nuisances: This chapter, specifically addressing the definition and abatement of nuisances. The accumulation of waste, the creation of unsanitary conditions and the pervasive foul odors all constitute public health nuisances that fall squarely within the purview of this chapter.

Court Judgments – Orders:

1) MC Mehta vs Kamal Nath 2000: (SCR Citation (2000) Supp / (1) S.C.R. 389, Date of Judgment: 12 May 2000) Supreme Court (SC) held that any disturbance of the basic environment elements, namely air, water and soil, which are necessary for "life", would be hazardous to "life" within the meaning of Article 21 of the Constitution. SC held that Right to life within Art. 21 includes the right to live in a healthy environment, right to enjoy pollution-free water and air, and right to live in a pollution-free environment.
2) Virender Gaur vs. State of Haryana (1995) (SCR Citation: (1994) Supp. (6) S.C.R.78, Date of Judgment: 24 November 1994) Supreme Court (SC) Stated Article 21 protects right to life as a fundamental right. Enjoyment of life and its attainment including their right to life with human dignity encompasses within its ambit, the protection and preservation of environment, ecological balance free from pollution of air and water, sanitation without which life cannot be enjoyed.

ஆகவே மேற்கண்ட தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம்,1939 மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் மழை நீர் வடிகால் / சாக்கடை கழிவு நீர் வடிகால் பணியினை நிறைவேற்றிட வேண்டும்.

10) எனவே கீழ்கண்ட நிவாரணங்கள் கோரப்படுகின்றன.

a) பொள்ளாச்சி நகராட்சியில் 25.10.2024 அன்று நகரமன்ற கூட்டரங்கில் விஜபி கார்டன் தொடர்பாக மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நகர்மன்ற அனுமதி எண். 1264, நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை உடனடியாக செயல்படுத்தப்பட வேண்டும்.

b) ஒரு வருடத்திற்கு மேல் நகராட்சி இப்பணியினை தொடர்ந்து காலதாமதமும், அலட்சியமும் செய்வதால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டிற்கு உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆணையாளர், நகராட்சி மண்டல இயக்குநர் ஆகியோர் பொறுப்பேற்றிட வேண்டும்.

c) மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், ஆணையாளர், நகராட்சி மண்டல இயக்குநர் ஆகியோர் மீது துறைரீதியான தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்." என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.6479/2025/இ1, நாள் 14.11.2025–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திரு. ரா. மோகன் என்பவரின் முறையீட்டு புகார் மனுவில் பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36, VIP கார்டனில் புதியதாக பக்கச்சுவர் கட்டி வடிகால் கட்டித்தர தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை அவர்களுக்கு புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

நகர்மன்ற தீர்மான எண்.1264, நாள் 25.10.2024–ன்படி மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.23901/2025/எம்எ1, நாள்.19.09.2025–ன்படி மேற்காண் பணிக்கு 19.09.2025–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேலும் மேற்காண் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்குவதற்காக எதிர்வரும் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு பணியினை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் ஆகியோரை 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன

5. மனுதாரர் 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''பொள்ளாச்சி நகராட்சி 36–வது வார்டுக்கு உட்பட்ட விஜபி கார்டன் பகுதியில் உள்ள சாக்கடை வடிகால் / மழைநீர் வடிகால் குழாய்கள் சேதமடைந்துள்ளதால், சாக்கடை கழிவு நீர்/ மழை நீர் சரிவர செல்லாமல் மேடு பள்ளமாக உள்ள அனைத்து சாலைகளிலும் கழிவு நீர் ஓடுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. பாதாள சாக்கடை பணியினை நிறைவேற்றி தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் நகராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை. விஜபி கார்டன் பகுதியில் வசிக்கும் குடியிருப்பு வாசிகளிடம் கட்டிட அனுமதியின்போது பாதாள சாக்கடை பணிகளுக்காக பெறப்பட்ட வைப்புத் தொகையினை கொண்டு விஜபி கார்டன் பகுதிக்கு பாதாள சாக்கடை அமைத்துத் தருமாறு நகராட்சி ஆணையாளர், நகராட்சி மண்டல இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட புகார் கடிதங்களுக்கு சரியான தகவல்கள் வழங்கப்படுவதில்லை.

2. விஜபி கார்டனில் 30–க்கும் மேற்பட்ட வீடுகளிலிருந்து வெளியேறும் மழை நீர் / சாக்கடை கழிவு நீர் செல்ல முறையான வடிகால் அமைக்கப்படாமல் ஒரு வருடமாக பணி மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்தி வருகின்றனர். இதனால், பொதுமக்களாகிய நாங்கள் குழுவாக 31.08.2024 அன்று முந்தைய நகராட்சி ஆணையரை சந்தித்தபோது, பாதாள சாக்கடை வருகின்ற அடுத்த திட்டப் பணிகளுடன் செய்து வழங்குவதாகவும், அதுவரை இருக்கின்ற சாக்கடை வடிகாலை, மழை நீர் வடிகாலாக சரிசெய்து வழங்குவதாக உறுயளிக்கப்பட்டது. 25.10.2024 அன்று நடைப்பெற்ற நகரமன்ற கூட்டத்தில் மழைநீர் வடிகால் பணிகள் தொடர்பாக புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நகராட்சி இளநிலைபொறியாளர் விஜபி கார்டன் பகுதியில் நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டும் எந்தவித மேல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. இந்நிலையில், மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. நகராட்சி சுகாதார பிரிவிலிருந்து சுகாதார தூய்மை பணியாளர்களால் விஜபி கார்டனில் சாக்கடை வடிகாலை தூய்மை செய்துவந்தாலும், தேங்கி நிற்கும் சாக்கடை கழிவு நீர்/மழை நீரால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது.

எங்கள் பகுதி மக்களுக்கு ஏற்படும் சுகாதார சீர்கேட்டிற்கு காரணமாக இருக்கும் 36-வது வார்டு உள்ளாட்சி பிரதிநிதி, ஆணையாளர், நகராட்சி மண்டல இயக்குநர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவிடுமாறு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.6479/2025/இ1 நாள் 26.11.2025–ல் பொள்ளாச்சி மற்றும் வால்பாறை நகராட்சிகளில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) பணியில் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் பணியிருப்பதால் 27.11.2025 அன்று கோயம்புத்தூர் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்றவுள்ள விசாரணைக்கு பொள்ளாச்சி நகராட்சி வருவாய் அலுவலர் (ம) நிர்வாக அலுவலர் (பொறுப்பு) திரு. தி..சண்முகராஜா மற்றும் இளநிலை பொறியாளர் திரு. ந. அப்புசாமி ஆகிய இருவரையும் ஆஜராக அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, பொள்ளாச்சி நகராட்சி வருவாய் அலுவலர் (ம) நிர்வாக அலுவலர் (பொறுப்பு) மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் 27.11.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“மனுதாரர் குறிப்பிட்டுள்ள பொள்ளாச்சி நகராட்சி 36–வது வார்டுக்கு உட்பட்ட விஜபி கார்டன் மழைநீர் / சாக்கடை கழிவு நீர் செல்ல முறையான வடிகால் அமைத்து தருவது தொடர்பாக நகர்மன்ற தீர்மான எண். 1264, நாள் 25.10.2024–ன் படி மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. அதன்பேரில் 19.09.2025 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிக்கு 24.10.2025–இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்குவதற்காக எதிர்வரும் நகர்மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டு, பணியினை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மற்றும் எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை, பொள்ளாச்சி நகராட்சி வருவாய் அலுவலர் (ம) நிர்வாக அலுவலர் (பொறுப்பு) மற்றும் நகராட்சி இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

பொள்ளாச்சி நகராட்சி, 36–வது வார்டுக்குட்பட்ட விஜபி கார்டன் பகுதியில் சாக்கடை வடிகால் / மழைநீர் வடிகால் குழாய்கள் சேதமடைந்து உள்ளதால் 30–க்கும் மேற்பட்ட வீடுகளிலிருந்து வெளியேறும் மழை நீர் / சாக்கடை கழிவு நீர் சாலைகளில் வழிந்தோடுவதால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது என்பதும், கட்டிட அனுமதியின்போது பெறப்பட்ட பாதாள சாக்கடை பணிகளுக்கான வைப்புத் தொகை கொண்டு பாதாள சாக்கடை அமைத்துத் தர குடியிருப்போரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், சாக்கடை வடிகால்/மழை நீர் வடிகால் அமைக்கும் பணி அடுத்த திட்டபணிகளுடன் செய்து தரும் வரை, தற்போதுள்ள சாக்கடை வடிகால்/மழை நீர் வடிகால் சரிசெய்து வழங்குவதாக நகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், நகர்மன்ற தீர்மானத்தின் படி அனுமதி பெற்று ஓராண்டு ஆன நிலையில், உடனடியாக மழைநீர் / கழிவு நீர் வடிகால் அமைத்துதர வேண்டும் என்பதும், மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

பொள்ளாச்சி நகராட்சி, 36–வது வார்டுக்கு உட்பட்ட விஜபி கார்டன் பகுதியில் மழைநீர் / சாக்கடை கழிவு நீர் செல்ல முறையான வடிகால் அமைத்திட நகர்மன்ற அனுமதி, நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்க உள்ளது என்பதும், எதிர்வரும் நகர்மன்ற கூட்டத்தின் ஒப்புதல் பெற்று பணி விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி வருவாய் அலுவலர்/நிர்வாக அலுவலர் (பொறுப்பு) மற்றும் நகராட்சி இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், பொள்ளாச்சி நகராட்சி, 36–வது வார்டுக்கு உட்பட்ட விஜபி கார்டன் பகுயில் மழைநீர் / சாக்கடை கழிவு நீர் செல்ல முறையான வடிகால் அமைத்திட ஏற்கனவே நகர்மன்ற

அனுமதி, நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்க இருப்பதாக ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி வருவாய் அலுவலர்/நிர்வாக அலுவலர் (பொறுப்பு) மற்றும் நகராட்சி இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கழிவுநீர் வடிகால் / மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை போர்கால அடிப்படையில் விரைந்து மேற்கொள்ள தேவையான நடவடிக்கையை எடுத்திடவும், தெருக்களில் வழிந்தோடும் கழிவு நீரால் பொது மக்களுக்கு சுகாதாரகேடு ஏற்பட வாய்ப்புள்ளதை கருத்திற்கொண்டு, கழிவுநீர் வடிகால் / மழைநீர் வடிகால் அமைக்கும் பணி முழுமைபெறும் வரை நகராட்சி சுகாதார தூய்மை பணியாளர்களை கொண்டு தெருக்களில் கழிவுநீர் தேங்காதவாறு கண்காணித்திடவும் மனுதாரர் கோரியவாறு பாதாள சாக்கடை அமைப்பது குறித்து பரிசீலிக்குமாறும் வீடுகளில் உள்ள மழைநீர் சாலைகளில் வெளியேறாத வகையில் மழைநீர் சேமிப்புத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்குமாறும் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது

2025–ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 19 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. திரு. R. மோகன்,
   எண்.71, விஜபி கார்டன்,
   மாக்கினாம்பட்டி சாலை,
   ஜோதிநகர், பொள்ளாச்சி,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   பொள்ளாச்சி நகராட்சி,
   கோயம்புத்தூர் மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.